# ஆர்ஷ வித்யா குருகுலம், ஆனைக்கட்டி

# திருமந்திரம் ஓர் அறிமுகம் – முதல் வகுப்பு

**விநாயகர் காப்பு**

**ஐந்து கரத்தனை யானை முகத்தனை**

**இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை**

**நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்**

**புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே**

**பாயிரம் - கடவுள் வாழ்த்து**

**1.ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்**

**நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தான்ஐந்து**

**வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்**

**சென்றனன் தானிருந் தான்உணர்ந் தெட்டே. 1**

**2.கடந்துநின் றான்கம லம்மல ராதி**

**கடந்துநின் றான்கடல் வண்ணம்எம் மாயன்**

**கடந்துநின் றான்அவர்க்கு அப்புறம் ஈசன்**

**கடந்துநின் றான்எங்கும் கண்டுநின் றானே. 14**

**3.ஆதியு மாய்அர னாய்உட லுள்நின்ற**

**வேதியு மாய்விரிந்துஆர்ந்துஇருந் தான்அருள்**

**சோதியு மாய்ச்சுருங் காததோர் தன்மையுள்**

**நீதியு மாய்நித்த மாகிநின் றானே. 15**

**4.வாழ்த்தவல் லார்மனத் துள்ளுறு சோதியைத்**

**தீர்த்தனை அங்கே திளைக்கின்ற தேவனை**

**ஏத்தியும் எம்பெரு மான்என்றுஇறைஞ்சியும்**

**ஆத்தம் செய் தீசன் அருள்பெற லாமே. 39**

**2.வேதச்சிறப்பு**

**5.வேதத்தை விட்ட அறமில்லை வேதத்தின்**

**ஓதத் தகும்அறம் எல்லாம் உளதர்க்க**

**வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற**

**வேதத்தை ஓதியே வீடுபெற் றார்களே. 1**

**3. ஆகமச்சிறப்பு:**

95. பரனாய்ப் பராபரம் காட்டி உலகில்

தரனாய்ச் சிவதன்மம் தானேசொல் காலத்து

அரனாய் அமரர்கள் அர்ச்சிக்கும் நந்தி

உரன்ஆகி ஆகமம் ஓங்கிநின்றானே.

**4. குருபரம்பரை**

7.நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்

நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி

மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்

என்றிவர் என்னோ டெண்மரு மாமே. 1

**5. திருமூலர் வரலாறு**

8.யான்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்

வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்

ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்

தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே. 13

**6. அவையடக்கம்**

9. ஆரறி வார் எங்கள் அண்ணல் பெருமையை

யாரறி வார்இந்த அகலமும் நீளமும்

பேரறி யாத பெருஞ்சுடர் ஒன்றதின்

வேரறி யாமை விளம்புகின் றேனே. 1

**7. திருமந்திரத்தொகைச் சிறப்பு**

10. மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்

ஞாலம் அறியவே நந்தி அருளது

காலை எழுந்து கருத்தறிந் தோதிடின்

ஞாலத் தலைவனை நண்ணுவர் அன்றே. 1

**9. மும்மூர்த்திகளின் முறைமை**

11. அளவில் இளமையும் அந்தமும் ஈறும்

அளவியல் காலமும் நாலும் உணரில்

தளர்விலன் சங்கரன் தன்னடி யார்சொல்

அளவில் பெருமை அரியயற் காமே. 1